# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 26.07.2019 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Buckle odai, Development Canal Promenade Development, Regeneration and Cleaning in ABD Area of Thoothukudi பணிக்காக ரூ. 78,88,00,000/–மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு டெண்டர் கோரப்பட்ட 46.03 கோடி 11.04.2019 அன்று ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 02.07.19 தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 03.07.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு S. Sutharson<br>மதிப்பீட்டை விட 9.68 % அதிகம் (ரூ 43,13,02,795.30)<br>2) திரு. S. Rex<br>மதிப்பீட்டை விட14.86% அதிகம் (ரூ 45,16,65,361.30)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. Sutharson என்பவரின் (மதிப்பீட்டை விட 9.68% அதிகம் ரூ. 43,13,02,795.30) அதிகம். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல்.<br>1. திரு .S. Sutharson<br>மதிப்பீட்டை விட 4.88% அதிகம் (ரூ.41,24,13,566.30)<br>கொடுத்துள்ளனர்.<br>2. திரு. S. Rex<br>மதிப்பீட்டை விட14.86% அதிகம் (ரூ 45,16,65,361.30)<br><br>திரு. S. Sutharson என்பவரின் விலை குறைப்பு ஒப்பந்தப் புள்ளியானது (மதிப்பீட்டை விட ரூ 4.88 % (ரூ.41,24,13,566.30) அதிகம் பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.7.2–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5 % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 4.88% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 125)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஸ்மார் சிட்டி திட்டப் பணியாக இருப்பதால் மதிப்பீட்டை விட 4.88% அதிகமாக கொடுத்த திரு. S. Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File Nos. E1/03209/2015 (Buckle) | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி, பொது சுகாதாரம் திரேஸ்புரம் ஆரம்ப சுகாதார மையத்தில் நகர சுகாதார செவிலியாளராக பணிபுரிந்த பணியாளர் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்திற்கு CLC நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு முறையில் தற்காலிகமாக 1 நகர சுகாதார செவிலியரை பணியமர்த்திக்கொள்ளவும், மேற்படி சுகாதார செவிலியருக்கு NUHM மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்களுக்கு திட்ட இயக்குநர், மாநில சுகாதார சங்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4782/ NUHM/SMS/2017 நாள் 11.12.2018ன் படி வழங்குவது போன்று மாத ஊதியம் ரூ. 11000/– வழங்கவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிரந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>எச்1/325/18 | 126)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 3)தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக 05.08.2008 முதல் தரம் உய்ாத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து கடந்த 2011ஆம் ஆண்டு எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட சமயம் 5 கிராம ஊராட்சிகள் மாநகராட்சி எல்லையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு 60 வார்டுகளைக்கொண்ட விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தூத்தக்குடி நகரமானது தொழில் துறை மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.<br>மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் பல்வேறு வளர்ச்சி பணிகள் திட்ட பணிகள் மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்பணிகள் யாவும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் இருந்து வருகிறது.<br>இந்நிலையில் ஆணையர் அவர்களின் கீழ் பணிபுரியும் சார்நிலை அலுவலர்களான முதுநிலை நகரமைப்பு அலுவலர், நகர் நல அலுவலர் அகியவர்களுக்கு என மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் மாத வாடகைக்கு ஈடுபடுத்தப்பட்டு மாநகராட்சிப் பொது நிதியில் இருந்து இதற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் மாநகராட்சிக்கு தொடர் செலவினங்கள் ஏற்படும் நிலை உள்ளது. இந்நிலையில் பல்வேறு வளர்ச்சி பணிகளை பார்வையிடவும் ஆய்வு பணிகளுக்கு வருகை தரும் உயர் அலுவலர்களை அழைத்த செல்வதற்கு என பிரத்யேகமாக தனியாக வாகனம் ஏதும் இம்மாநகராட்சியில் இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கும் ஆணையர் அவர்களின் வாகனத்தையே பயன்படுத்தும் நிலை உள்ளது. | 127) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | இதனால் நிர்வாக ரீதியான சிரமங்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. இது போன்ற பணிகளுக்கு அவசர தேவைக்கு ஏற்ப வாடகை அடிப்படையில் குறிப்பிட்ட நாட்களுக்கு வாகனங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. இது போன்ற அசாதாரண சூழ்நிலைகளை முற்றிலும் தவிர்க்க ஏதுவாக இது போன்ற பணிகளுக்கு இம்மாநகராட்சிக்கு இன்னோவா (Innova Car) வாகனம் ஒன்று ஆணையர் அவர்களின் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள பிரத்யேகமாக தேவைப்படுகிறது.<br>மேற்படி சூழ்நிலையில் இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே உரிய அனுமதி பெற்று வாங்கப்பட்ட பதிவு எண்.டி.எண். 69 H 4446 எண் கொண்ட அம்பாசிடர் (Ambassador) கார் ஆகஸ்ட் 2003ஆம் ஆண்டு வாங்கப்பட்டு 13 ஆண்டுகள் நிறைவு பெற்றும் தவிர தொடர் பயன்பாட்டிற்கு எவ்வகையிலும் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதன்படி மேற்படி வாகனத்தை கழிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதில் இவ்வாகனம் 2,83,100 கி.மீ. இயக்கப்பட்டும் 13 ஆண்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டும் உள்ளதால் கழிவு செய்திட அனுமதி வழங்கி அதன்படி தொழில் நுட்ப வல்லுநர் ஆய்வறிக்கையின் அடிப்படையில் ரூ. 22,000/– குறையாமல் விற்பனை செய்து கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப வல்லுநர் அறிக்கையின் உண்மை நகல் ஒன்று இத்துடன் தங்களின் கனிவான பார்வைக்கு இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாகனத்தை பொது ஏலம் விட அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஏலம் விடப்பட்டு ஏலத்தொகையானது மாநகராட்சி நிதியில் வரவு வைக்கப்படும்.<br>எனவே இவ்வாகனத்திற்கு பதிலாக பொருளில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான பணிகளை பணிபார்க்க ஏதுவாக ஜெம் விலை விகிதத்தில் (Gem rate) Innova Crysta/VX (7) 021-2019 மாதிரி வாகனத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து வாங்கி கொள்ளவும் இதற்கான தோராய செலவுத் தொகை ரூ. 23,76,984/–க்கும் தவிர இது தொடர்பான இதர செலவினங்களுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கி கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்<br>2) மேற்படி வாகனம் வாங்குவதற்கான செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஏற்கலாம்.<br>3) பொருளில் தெரிவிக்கப்பட்ட விவரப்படியான கழிவு செய்யப்பட்ட வாகனத்தை பொது ஏலம் விட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். இ5/2118/2019 | |
| | | 4)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார்ட் சிட்டி பணியில் Engaging Energy Auditing Agencies for Conducting Investmnent Grade Audit in Street Lighting system and Preparing Detailed Project Report for Implementing Energy saving Measures in Thoothukudi Corporation என்ற பணிக்கு மதிப்பீட்டு ரூ. 24,75,000/–க்கு தயாரிக்கப்பட்டு 21.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைப்புள்ளி உறை | 128)<br>அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 08.07.2019 அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு<br><br>1) திரு. M/S. Sri Boomidurga Marketing (P) Ltd Navitas Energy Consultants<br>மதிப்பீட்டை விட 1.59 % குறைவு (ரூ. 19,58,580.00)<br>2)திரு. M/S. Krishna Bharathi Power System<br>மதிப்பீட்டை விட 0.79 % அதிகம் (ரூ. 20,05,965.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கொடுத்துள்ள Sri Boomidurga Marketing (P) Ltd Navitas Energy Consultants . நிறுவனத்தின் (மதிப்பீட்டை விட 1.59 % குறைவு (ரூ. 19,58,580.00) ஒப்பந்தப்புள்ளியை ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 1.59% குறைவாக கொடுத்துள்ள M/S. Sri Boomidurga Marketing (P) Ltd Navitas Energy Consultants . நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். .<br>இ1/03209/2015 (SL.Capex) 1GA) | |
| | 5)தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மாநகராட்சி வார்டு பகுதிகளில் 16 நுண் உரக்கிடங்கு அமைத்து டாடா எஸ். (TATA ACE) இலகுரக வாகனம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்படி துப்புரவு பணிகள் மேற்கொள்ள புதிதாக வாங்கப்பட்டுள்ள 28 இலகுரக வாகனங்களுக்கு நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிகமாக மேலும் 28 வாகன ஓட்டுனர்களை பணியமர்த்திக்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/296/19 | 129) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் சுற்றுலாத்துறையின் சார்பாக சுற்றுலா தலங்களுக்கு வரும் பக்தர்களுக்கு தகவல் அளிக்கும் பொருட்ட 4 X 3 அளவில் சிறு குறியீட்டு பலகை வைப்பதற்கு கட்டணங்கள் கட்டுவதிலிருந்து விலக்கு அளித்து தடையின்மை சான்று வாங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம் விபரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுக்கு மேல் அனுப்பலாம்.<br>எப்1/2983/2019(வ.ம) | 130) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொத நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மணி நகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்காக ரூ. 49,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 18.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 13.02.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. S. Rambola<br>மதிப்பீட்டை விட 0.21% குறைவு (ரூ. 37,28,952.00)<br>2)திரு. J. Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 5.72% குறைவு (ரூ. 39,50,791.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. S. Rambola ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/4876/2018 | 131) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக் கப்பட்டது.<br><br>குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |
| | 8)தூத்துக்குடி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்ட வரையறை குறித்து தயாரித்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்மறை ஆணை எண். 24100/பி3/நாள் 31.10.2017ன் படி அறிவுறுத்தப்பட்டதின் பெயரில் தூத்துக்குடி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை குறித்து கொள்கை மற்றும் திட்ட வரையறை தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டுள்ளது. மேற்படி திடக்கழிவு மேலாண்மை கொள்கைகள் மற்றும் திட்ட வரையறை புத்தகத்தை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் அதற்கான செலவு தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்3/2034/16 | 132) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகள் ஒப்பந்ததாரர்கள் மூலம் நடைபெற்று வந்தது. தற்போது அவர்களின் 1 வருட காலம் ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் மேற்கொண்டு பள்ளி கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ள நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியாளர்களை பணியமர்த்தவும் அதற்குண்டான செலவுத்தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எச்3/250/2018 | 133) அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 10)தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் தெற்கு காட்டன் ரோட்டில் அமைந்துள்ள நவீன கட்டண கரிப்பிடம் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்பட்டு வரும் கட்டண கழிப்பிடங்கள் 8 ஆக மொத்தம் 10 கழிப்பிடங்கள் இம்மாநகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடங்கள் அகும்.<br>இதில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மற்றும் தெற்கு | 134) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | காட்டன் ரோட்டில் உள்ள கழிப்பிடம் குத்தகை இனத்தில் இடம் பெற்று உள்ளது. இதன் ம்லம் ஆண்டு 1க்கு உத்தேசமாக ரூ. 5.67 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது. அதே வேளையில் இக்கழிப்பிடத்தின் கட்டுமான பராமரிப்பு பணிகள் மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கு பொது நிதியில் இருந்து தொடர்ந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி இக்கழிப்பிடங்கள் மூலம் கனிசமாக வருவாய் இம்மாநகராட்சிக்கு கிடைக்கப்பெறும் வாய்ப்புகள் ஏதும் இல்லை.<br>மேலும் இக்கழிப்பிடங்கள் ஏலம் / குத்தகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்யம் சூழ்நிலை களில் வரையறுக்கப்பட்ட கட்டணங்களுக்கு கூடுதலாக கட்டணம் வசூலித்தல், மற்றும் கழிப்பிடங்களை சேதப்படுத்துதல் தொடர்பான புகார்கள் தொடர்ந்து பெறப்பட்டு வரும் அசாதாரண சூழ்நிலை ஏற்படுகிறது.<br>மேலும் இம்மாநகராட்சியின் பகுதிகளில் உள்ள அனைத்து நவீன கழிப்பறைகளையும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக பயன்படுத்திட அனுமதிப்பதற்கும் மேற்படிஅனைத்து கழிப்பறைகளும் மாநகராட்சி நிர்வாகத்தின் மூலமாக வெளிக்கொணர்வு அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மாநகராட்சி மூலம் ஊதியம் வழங்கவும், இதன்படி ஈடுபடுத்தப்படவேண்டிய 25 உத்தேசப் பணியாளர்களைக்கொண்டு பராமரிப்பதற்கு உத்தேச செலவினமாக ரூ. 2,62,500/–ஐ பொது சுகாதார திடக் கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து செலவு செய்யவும், இது தொடர்பான மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும் தவிர இதன்படி மேற்படி கழிப்பிடங்களை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்படைப்பதனை கைவிடவும் இந்த இரண்டு இனங்களை ஏலம் . ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையில் இருந்து நீக்கம் செய்யவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். அ16/4741/2015 | |
| | **11)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா பிரிவின் மூலம் கொசுப்புழக்கள் ஒழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Mosquito Larvicide Oil (MLO) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/s. Jeet Labs Pvt. Ltd. Pune நிறுவனத்தின் மூலம் 1லிட்டர் ரூ. 68/– (Plus GST @ 18% Rs. 12.24 = Rs. 80.24/-) வீதம் 15000 லிட்டர் வாங்கிடவும் முதிர் கொசுக்களை ஒழிக்க வீடுகளுக்குள் புகை மருந்து அடிக்க (INDOOR FOGGING) பயன்படுத்தப்படும் பைரித்திரம் (PYRETHRUM) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/s Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs. 198 = Rs.1298/- ) வீதம் 1000 லிட்டர் வாங்கிட அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகையினை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | **135)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 12) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான சத்திரம் தெரு கழிவு நீரேற்று நிலையம் மற்றும் பாளை ரோடு மார்க்கட் சந்திப்பு கழிவு நீரேற்று நிலையம் ஆகியவைகளில் தினசரி இரவு மற்றும் பகல் நேரங்களிலும் மோட்டார்களை இயக்கி சேகரமாகும் கழிவு நீரை நீரேற்றம் செய்யும் அத்தியாவசியப் பணிகளுக்கு பணியாட்கள் பற்றாக்குறை காரணமாக போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மேற்படி நிரேற்று நிலையங்களைர் சார்ந்த பகுதிகளில் கழிவு நீர் தேக்கம் ஏற்பட்டு சுகாதார கேடு உருவாகும் நிலை அடிக்கடி ஏற்படுகிறது.<br>மேலும், மாநகராட்சி மைய அலுவலக வாளகத்தில் மின் தடை அடிக்கடை ஏற்பட்டு அலுவல் பணிகள் பாதிக்கப்படும் சூழலில் இதன் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள 250 KV ஜெனரேட்டரை உடனுக்குடன் இயக்கி பராமரிக்க வேண்டிய அத்தியாவசியப் பணிக்கு இயக்குபவர்கள் இல்லாத காரணத்தால் இப்பணியிலும் மிகுந்த பின்னடைவு மற்றும் நிர்வாக ரீதியாக சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி தெரிவிக்கப்பட்ட விவரப்படியான அத்தியாவசிய காரணங்களை கருத்திற்கொண்டு கீழ்க்கண்ட பணியாட்கள் இப்பணிகளை மேற்கொள்ள ஈடுபடுத்தப்படுவது மிகவும் அவசியமாகிறது.<br>1. பம்ப் ஆப்ரேட்டர் ( Without I.T.I.) -2 Nos.<br>2. பம்ப் ஆப்ரேட்டர் (With I.T.I. or Diploma) - 1 எண்ணம்<br>3. கிளீனர் (Drainage) - 2 எண்ணம்<br>மேற்படி மனித ஆற்றல்களை நகர்புற வாழ்வாதார மையம் (City live hood centre) மூலம் PWD/TW/AD/District Collector – அனுமதிக்கப்பட்ட தினசரி ஊதிய அடிப்படையில் 01.07.2019முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் ஈடுபடுத்திக்கொள்ளவும், இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 7.40 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் 26.06.2018 அன்று முன் அனுமதி பெற்று 01.07.2019 முதல் பொருளில் கண்டுள்ள விவரப்படியான மனித ஆற்றல்களை ஈடுபடுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை ஒப்புதல் செய்யலாம்.<br>ந.க.எண்.இ5/02396/2019 | 136) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 26.07.2019